**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 32 /2025 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. ஜீவானந்தம் (உதவி ஆய்வாளர் ஓய்வு) |
| Father's/Husband Name | | திரு.காத்தமுத்து |
| Village | | துவறங்குறிச்சி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 67/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of October 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2016 பணி ஓய்வு பெற்று பட்டுக்கோட்டை துவரங்குறிச்சியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு அதிராம்பட்டிணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 21.03.2016 ந் தேதி காலை ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர் அவர்களும் ஆய்வாளர் ரவிசந்திரன் அவர்களுக்கு உதவியாக பள்ளிக்கொண்டான் பகுதியில் கண்காணித்து வந்தபோது காலை சுமார் 10.00 மணியளவில் பள்ளிக்கொண்டான் நொச்சிக்குளம் அருகில் மகேந்திரா 475 DI TN 61 7353 என்ற டிராக்டர் டிப்பர் மணல் ஏற்றி வந்த இருவர் போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தனர். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரிகள் ஆவார். நாங்கள் டிராக்டர் டிரைவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது 2ம்

எதிரியை விசாரித்தபோது தன் பெயர் பன்னீர்செல்வம் என்றும் தப்பி ஓடியது டிராக்டர் ஓனர் சீனிவாசன் என்றும் கூறினார். எதிரி பன்னீர்செல்வத்தை விசாரிக்க எந்த அரசு அமனுமதியும், பர்மீட்டும் இல்லை. எனவே பொதுமக்கள் யாரும் சாட்சிகள் இல்லாத காரணத்தால் போன் மூலம் கிராம நிர்வாக அலுவார் முத்துகருப்பன் உதவியாளர் பக்கிரி அவர் தகவல் சொல்லி அவர் வந்து அவரது முன்னி்லையில் விசாரித்தபோது தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் அடிப்படையில் அன்றைய தினம் 11.00 மணிக்கு மணலுடன் கூடிய டிராக்டரை சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். பின்பு கைது செய்த எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து குற்ற எண். 85/2014 ச/பி 379 r/w 21(1) M&M (D&R)Act ன் படி ஆய்வாளர் வழக்கு பதிவுசெய்தார். ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை